FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
# Term Examination, March - 2018

| தரம் :- 13 (2018) | வணிகக்கல்வி I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- *01* தொடக்கம் *30* வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- *31* தொடக்கம் *50* வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் :....................................

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் *1* இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| *01 - 30* | |
| *31 - 50* | |
| மொத்தம் | |

agaram.lk

01) வணிக அடிப்படை தொடர்பில் பின்வருவனவற்றில் ஒன்று ஏனையவற்றிலிருந்து வேறுபட்டுள்ளது. அவ்வாறு வேறுபட்டுள்ள கருமம் எது?
1) உற்பத்தி  2) நிதி  3) தேவைகளும் விருப்பங்களும்
4) நிர்வாகம்  5) ஆராய்ச்சியும், அபிவிருத்தியும்  (……….)

02) மனித மூலதன அபிவிருத்திக்காக வணிகங்கள் ஆற்றும் பங்களிப்பு எவ்வாறு அழைக்கப்படும்.
1) வணிகங்களின் தூரநோக்கு  2) வணிகங்களின் சமூகப் பொறுப்பு  3) வணிக விழுமியம்
4) வணிக கலாச்சாரம்  5) வணிக, எதிர்பார்ப்பு  (……….)

03) வணிகமொன்றுக்கு மிக முக்கியமான புறச்சூழல் காரணியாக கருதப்படக்கூடியது பின்வருவனவற்றுள் எது?
1) அரசியல் சட்டச்சூழல்  2) சமூகக் கலாசாரச் சூழல்  3) இயற்கைச் சூழல்
4) மக்கட்சூழல்  5) பொருளாதார சூழல்  (……….)

04) பின்வருவம் அட்டவணையில் X நிரலில் உற்பத்தித்துறையும் Y நிரலில் அவற்றினது துணைப் பிரிவுகளும் குறிக்கப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A – விவசாயம் | 1. வங்கி, காப்புறுதி |
| B – கைத்தொழில் | 2. கட்டட நிர்மாணம் |
| C – சேவை | 3. கடற்தொழில் |
| | 4. உற்பத்திக் கைத்தொழில் |
| | 5. போக்குவரத்துத் தெடர்பாடல் |
| | 6. சுரங்கமறுத்தல் |

X,Y நிரல்களின் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

1) A – 4, 6 B – 1, 5 C – 2, 3
2) A – 2, 4 B – 3, 6 C – 1, 5
3) A – 2, 3 B – 4, 6 C – 1, 5
4) A – 3, 6 B – 2, 4 C – 1. 5
5) A – 4, 6 B – 3, 5 C – 1, 2 (……….)

05) பின்வருவனவற்றுள் எது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமொன்று அல்ல?

1) புலமைச் சொத்து அதிகாரச்சட்டம்
2) தேசிய சூழற் பாதுகாப்புச் சட்டம்
3) தொலைத் தொடர்பாடல் ஒழுங்குபடுத்தும் சட்டம்
4) மோட்டார் போக்குவரத்துச் சட்டம்
5) அழகுசாதனங்கள் மருந்துப் பொருட்கள் கட்டளைச் சட்டம் (……….)

06) பின்வரும் பங்குடமை ஒன்றின் பங்காளர்களில் புலப்படும் சில பண்புகள் ஆகும்.

A - மூலதனத்திற்குப் பங்களிப்புச் செய்தல்
B - மூலதனத்திற்குப் பதிலாகக் கடன் வழங்குதல்
C - முகாமையில் பங்குபற்றல்
D - மூலதனத்திற்குப் பங்களிப்புச் செய்யாமை
E - இலாபத்திற்கேற்ப மாற்றமடையும் வட்டிக்கு உரிமை கோரல்

மேற்குறித்த பண்புகளில் போலிப்பங்காளருக்குரிய பண்புகளை மாத்திரம் கொண்ட விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

1) A C E 2) C D E 3) B D E 4) D C E 5) D C E (……….)

07) வரையறுத்த பொதுக்கம்பனி தொடர்பில் மூன்று மாணவர்களது கூற்றுக்கள் பின்வருமாறு

A – ஒதுக்கங்களை மூலதனமாக்கலின் போது கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தில் அதிகரிப்பு இடம் பெறுவதுண்டு.

B – கம்பனிப்பங்குகளின் விலை பங்குச் சந்தையில் அதிகரித்துச் செல்லுதல், கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்துவதுண்டு.

C – பங்குப்பிளவு, பங்குச் சேர்க்கை ஆகிய செயற்பாடுகள் கூறப்பட்ட மூலதனத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதுண்டு.

மேலே உள்ள கூற்றுக்கள் தொடர்பில் சரியான விடையைத் தெரிவு செய்க.

1) Aசரி, Bயும் Cயும் பிழை
2) A பிழை, Bயும் Cயும் சரி
3) Aயும், Cயும் சரி, B பிழை
4) Bயும் Cயும் பிழை, A சரி
5) Bயுரி, Aயும் Cயும் பிழை (……….)

agaram.lk

08) அங்கீகார வணிகத்தினூடாக அங்கீகாரம் பெறுபவருக்குக் கிடைக்கும் ஒரு அனுகூலம்

1) அங்கீகார நிறுவனத்தின் கட்டளைக்கு அமைய செயற்பட வேண்டும்.
2) இலாபத்தின் ஒரு பகுதி தனியுரிமைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும்.
3) அங்கீகார உடன்படிக்கையொன்றைப் பெறுதல்.
4) வணிகத் தீர்மானங்களை எடுத்தல் இலகுவாதல்.
5) குறைந்தளவு இடர் காணப்படும் (………)

09) முயற்சியாண்மை தேர்ச்சிகளும் தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வதற்கான வழிகளில் சிலவும் கீழே தரப்பட்டுள்ளன.

A) முறையான திட்டமிடல்
B) சுய மதிப்பீடு
C) செல்வாக்குச் செலுத்தும் திறன்
D) பயிற்சி மற்றும் வேலைத்திட்டங்கள்
E) கல்வியும் அனுபவமும்
F) இடரை ஏற்கும் திறனும் தன்னம்பிக்கையும்

இவற்றில் முயற்சியாண்மைத் தேர்ச்சிகளை விருத்தி செய்யக்கூடிய வழிகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க?

1) A. C, D 2) A, B, C 3) A, D, F 4) B, D, E 5) B, E, F (………)

10) பின்வருவனவற்றுள் இலங்கை மத்திய வங்கியின் நேரடி மேற்பார்வையின் கீழ்வரும் நிறுவக வகைகளின் எண்ணிக்கை யாது?

A – உரிமம் பெற்ற வணிக வங்கிகள்
B – உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள்
C – உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்
D – கூட்டுறவுக் கிராமிய வங்கிகள்
E – சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள்

1) 1 2) 2 3) 3 4) 4 5) 5 (………)

11) பின்வருவன இலத்திரனியல் கடனட்டை ஒன்றில் குறிப்பிட்டுள்ள சில தகவல்கள் ஆகும்

A – கடனட்டைச் சங்கத்தின் இலச்சினை
B – அட்டை இலக்கம்
C – காந்தத் தன்மை கொண்டபட்டி
D – அட்டை உரிமையாளரின் பெயர்
E – அவசர தொலைபேசி இலக்கம்
F – காலாவதியாகும் திகதி
G – கையெழுத்துப்பட்டி

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் இலத்திரனியல் கடனட்டையின் பின்புறத்தில் காணப்படும் தகவல்களை மட்டும் கொண்டுள்ள தொகுதி யாது?

1) A. B, E 2) A, B, D 3) B, C, E 4) C, E, G 5) D, E, F (………)

12) பின்வருவனவற்றுள் காசோலை ஒன்று தொடர்பான பிழையான கூற்று எது?

1) காவிக்காசோலை ஒன்றைப்புறக்குறிப்பு (endorsement) எதுவுமில்லாமல் எவருக்கும் கைமாற்ற முடியும்.
2) திறந்த காசோலை ஒன்றை வங்கிக்கு எடுத்துச் செல்லும் நபர் ஒருவர் கருமபீடத்திலேயே அதனைக் காசாக்க முடியும்.
3) காசோலை ஒன்றின் புறக்குறிப்பு என்பது வரையுனர் காசோலை ஒன்றின் மறுபுறத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.
4) முகப்பக்கத்தில் எதுவித குறுக்குக் கோடிடல் இல்லாத காசோலை ஒன்று திறந்த காசோலை எனப்படும்.
5) கைமாற்றத் தகாதது எனக் குறுக்குக்கோடிட்ட காசோலையை கைமாற்றம் செய்ய முடியும். (………)

agaram.lk

13) காப்புறுதி செய்பவர் வெளிக்கட்சியினரிடமிருந்து இழப்பீட்டைப் பெறும் தனது உரிமையை காப்புறுத்துவோருக்கு மாற்ற வேண்டும் எனும் காப்புறுதித் தத்துவம் எது?

1) காப்புறுதி செய்யும் உரிமை
2) அதியுயர் நம்பிக்கை
3) பங்களிப்புத்தத்துவம்
4) பதிலாள் வைப்புத் தத்துவம்
5) அண்மைக் காரணித்தத்துவம்

(……….)

14) பொருட்களை இடமாற்றும் ஒரு பொருத்தமான வழிமுறையைத் தெரிவு செய்யும் போது பின்வருவனவற்றுள் எது பொதுவாகக் கருதப்படுவதில்லை?

1) பொருட்களின் தன்மை
2) தூரம்
3) காலம்
4) செலவு
5) சக்தி

(……….)

15) கணினித் தகவல் தொழிநுட்பத்தின் இரண்டு முக்கிய பகுதிகள்

1) தரவும் தகவலும் ஆகும்.
2) வன்பொருளும் மென்பொருளும் ஆகும்.
3) ஒழுங்குபடுத்தலும் இருப்பில் தேக்கி வைத்தலும் ஆகும்.
4) சேகரித்தலும் ஒழுங்குபடுத்தலுமாகும்.
5) சேகரித்தலும் நிரம்பல் செய்தலுமாகும்.

(……….)

16) ஒரு இறக்குமதியாளனின் பொருட்களினது உரிமையை நிரூபிக்கும் பிரதான ஆவணம்.

1) மாற்றுண்டியலாகும்
2) நாணயக்கடிதமாகும்
3) வார்நாமமாகும்
4) இறக்குமதிச் சான்றிதழ் ஆகும்
5) இறக்குமதி நுழைவு ஆகும்

(……….)

17) இலத்திரனியல் வியாபாரம் (e.trade) தொடர்பான உண்மையில்லாத கூற்று பின்வருவனவற்றுள் எது?

1) வாங்குவோன் பண்டங்களை நேருக்கு நேர் பரிசீலிக்க முடியும்.
2) போட்டியாளர் பண்டங்களுடன் ஒப்பிட முடியும்.
3) வாங்குவோன் பண்டங்களை விரைவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.
4) ஒப்பீட்டளவில் பொருட்களுக்கான குறைந்த விலைமட்டம்.
5) பயன்படுத்தப்படும் ஆவணங்கள் குறைவாக இருத்தல்.

(……….)

18) பின்வருவன சர்வதேச வர்த்தகம் தொடர்பாக ஏற்படக்கூடிய சில தடைகள் ஆகும்.

A – மொழி வேறுபாடு
B – உயர்வான வரி அறவீடு
C – இலத்திரனியல் செயற்பாடுகள்
D – இறக்குமதித் தடை
E – கலாசார வேறுபாடு
D – நாணய மாற்றுத் தொடர்பான கட்டுப்பாடுகள்

மேலே கூறப்பட்டவற்றில் இயற்கை ரீதியான தடைகளை காட்டும் தொகுதி எது?

1) A B
2) A E
3) D F
4) E F
5) C D

(……….)

agaram.lk

19) முகாமை பற்றிய மிகப்பொருத்தமான கருத்தை விபரிக்கும் கூற்றினைத் தெரிவு செய்க.

1) சரியான வழியில் சரியானதைச் செய்தல்.
2) மற்றவர்களைக் கொண்டு வேலையினைச் செய்விப்பது.
3) செயற்திறன் மிக்கதும் வினைத்திறன் மிக்கதுமன ஒரு முறையில் நிறுவனக் குறிக்கோள்களை அடைந்து கொள்ள வளங்களை உபயோகிப்பது.
4) குறிக்கோள்களை அமைத்தல், அவற்றைச் சிறந்த முறையில் எப்படி அடைவதென்பதைத் தீர்மானித்தல்.
5) திட்டமிடல் நிறுவன அமைப்பாக்கல், தலைமை வகித்தல், கட்டுப்படுத்தல் ஆகியவற்றின் செய்முறை. (………..)

20) வளங்களைப் பகிர்ந்தளித்தல் (Allocation of Resource) பின்வருவனவற்றுள் எப்பரப்பின் கீழ் அடக்கப்படும்.

1) திட்டமிடல் 2) ஒழுங்கமைத்தல் 3) நெறிப்படுத்தல்
4) ஊக்கப்படுத்தல் 5) கட்டுப்படுத்தல் (………..)

21) உற்பத்திப்பொருள் வரிசை (Product range) பல்லின மெனினும், உற்பத்தி செயன்முறை நெகிழ்வு மிக உயர்மட்டத்தில் உள்ள உற்பத்தி முறை.

1) கட்டளை உற்பத்தி 2) தொகுதி உற்பத்தி 3) பாய்ச்சல் உற்பத்தி
4) நேர் உற்பத்தி 5) நேரில் உற்பத்தி (………..)

22) உற்பத்தி நிறுவனமொன்றின் மொத்த கிரயத்தினை இழிவாக்குவதற்கு பெரும்பாலும் துணைபுரியக்கூடியது

1) ABC பகுப்பாய்வு 2) இலாபநட்டமற்ற புள்ளிப்பகுப்பாய்வு
3) இரு கொள்கலன் முறை 4) பொருளாதார கட்டளைக் கணியம்
5) பூச்சிய வழு (………..)

23) உற்பத்தி நிறுவனமொன்று உற்பத்தித்தள அமைப்பினை வடிவமைக்கும் போது கருத்தில் கொள்ளும் காரணி அல்லாதது பின்வருவனவற்றுள் எதுவாகும்

1) உற்பத்தி செயன்முறையின் தன்மை 2) கவர்ச்சிகரமான தன்மை
3) உற்பத்தி தொழில்நுட்ப முறைகள் 4) பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் தரம்
5) மேற்பார்வையும் கண்காணிப்பும் (………..)

24) கிளிநொச்சிப் பிரதேசத்தில் விளைந்த நெல்லினை மொத்தமாக கொள்வனவு செய்த வவுனியாவின் அரிசி ஆலையொன்று நெல்லினை தூய்மையான அரிசியாக பொதிகட்டி “நாட்டரிசி” என்ற பெயரில் சந்தைப்படுத்துகின்றது.
மேற்குறித்த வியாபார சின்னம் பின்வருவனவற்றுள் எச்சின்ன வகையாக கருத முடியும்.

1) தேசிய சின்னம் 2) தனிப்பட்ட சின்னம் 3) குடும்பச் சின்னம்
4) பொருள் சின்னம் 5) பண்டச் சின்னம் (………..)

25) முதலீட்டினை மையப்படுத்திய விலையிடல் முறையாக கருதக்கூடியது.

1) கிரயம் சார்ந்த விலையிடல்
2) போட்டி சார்ந்த விலையிடல்
3) இலக்குத் திரும்பல் விலையிடல்
4) பெறுமதி விலையிடல்
5) உணரப்படும் பெறுமதியில் விலையிடல் (……….)

26) பின்வருவனவற்றுள் பணச்சந்தையினைச் சேர்ந்தது எது?

1) முதலாம் தர பங்குச்சந்தை
2) இரண்டாம் தர பங்குச்சந்தை
3) திரைசேரி முறிகள் சந்தை
4) பிணை ஆணைச்சந்தை
5) உள்நாட்டு அந்நிய செலவாணிச் சந்தை (……….)

27) பின்வரும் நிதி முகாமைத்துவ தீர்மானங்களுள் ஒரு தீர்மானம் ஏனைய தீர்மானங்களிலிருந்து வேறுபட்டுள்ளது. அவ்வாறு வேறுபட்டுள்ள தீர்மானம் எது?

1) கடன்கொடுத்தோர், மற்றும் அட்டுறுச் செலவுகள் தொடர்பானவை.
2) வங்கிக்கடன், மற்றும் வங்கி மேலதிக பற்று தொடர்பானவை.
3) சரக்கிருப்பு, மற்றும் குறுங்கால வருமதிகள் தொடர்பானவை.
4) உரிமை மூலதனம், மற்றும் கடன் மூலதனம் தொடர்பானவை.
5) நிறுத்தி வைத்த இலாபம், மற்றும் பகிரத்தக்க இலாபம் தொடர்பானவை. (……….)

28) பின்வருவனவற்றுள் வேலை விபரணமொன்றில் காணப்படுவது

1) கல்வித்தகமை
2) சேவை தொடர்பான பணிகள்
3) மனிதச்சிறப்பியல்புகள்
4) அனுபவம்
5) தொழிற்தகமைகள் (……….)

29) கம்பனியொன்று தனது விற்பனை ஊழியர்களை நியமிப்பதற்காக தயார்செய்த விளம்பரத்தில் அவர்களின் அனுபவம், பயிற்சி ஆற்றல்கள் தொடர்பில் எதுவுமே குறிப்பிடாது விட்டமையினால் நியமிக்கப்பட்ட ஊழியர்களின் மூலம் முழுமையான பணியினை பெற முடியாது சிரமப்படுவதனை காணமுடிகின்றது.
மேற்படி பிரச்சினை கம்பனியின் எப்பிரச்சினையாக நீர் கருதுகின்றீர்.

1) தொழில் பகுப்பாய்வு
2) மனிதவள திட்டமிடல்
3) ஆட்சேர்ப்பு
4) செயற்றிறன் மதிப்பீடு
5) கைத்தொழில் உறவு (……….)

30) பின்வருவன மனிதவள முகாமைத்துவம் தொடர்பில் ஐந்து மாணவர்களின் கருத்துக்கள் ஆகும்.

A – தொழில் விபரணம் செய்தல் தொழிலை ஆற்றும் நபர்கள் தொடர்பிலும், தொழில் குறித்துரைத்தல் தொழில் தொடர்பான விடயங்களையும் விபரிப்பதுண்டு.

B – மனிதவள எதிர்கால திட்டமிடுகையில் பொருட்களுக்கான சந்தைக்கேள்வி முக்கியமாக கருத்தில் எடுத்தல் வேண்டும்.

C – ஒவ்வொரு ஊழியரும் உண்மையில் மனிதவள முகாமையாளரே ஆவர்.

C – மிகச்சரியான மனிதவள திட்டமிடல் உள்ள நிறுவனங்களில் ஊழியர் மிகை அல்லது பற்றாக்குறையினை காணமுடியாது.

C – மனிதவள திட்டமிடலைத் தொடர்ந்து இடம்பெறும் மிக முக்கியமான கருமம் தெரிவு செய்தல் என்பதாகும்.

மேற்படி கருத்துக்களில் எந்த மாணவரின் கூற்று சரியானது.

1) A மட்டும்
2) Bயும் Cயும்
3) Dயும் Eயும்
4) Cயும் Eயும்
5) B, C, D மட்டும் (……….)



agaram.lk

❖ **வினா இலக்கம் 31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கும் போது பொருத்தமான பதங்களைப் பயன்படுத்தி இடைவெளியினை நிரப்பவும்.**

31) அ) சுரங்கத்தொழில், தயாரிப்புத்தொழில், மின்வலு, கட்டிட வாக்கம் என்பன ………………… …………………… பிரிவுகளாக மத்தியவங்கி அறிக்கை இனங்காட்டுகின்றது.

ஆ) தனிநபர்களும், நிறுவனங்களும் ஒன்றில் ஒன்று சார்ந்திருத்தல் …………………………... என கருத முடியும்.

32) பொருளாதார நிதிநிலை உறுதிப்பாடு, ……………………………………… என்பவற்றினை பிரதான நோக்காக கொண்டு ……………………………………… தொழிற்பட்டு வருகின்றது.

33) அ) முதன்னிலை வணிகர்களும், முயற்சி மூலதனக் கம்பனியும் ………………………………… நிறுவன வகையாக கருதப்படும்.

ஆ) காப்புறுதிக் கம்பணிகளும், ஊழியர் நம்பிக்கை நிதியங்களும் …………………………... நிறுவன வகையாக கருதப்படும்.

34) இறக்குமதியாளனின் வேண்டு கோளுக்கிணங்க அவரது வங்கியினால் அவர் சார்பில் பிறப்பிக்கப்பட்டு ……………………………………………… வங்கிக்கு அனுப்பிவைக்கும் ஆவணம் ……………………………………….. என்பதாகும்.

35) அ) குறிப்பான நோக்கங்களையும், குறிக்கோள்களையும் குவிமையப்படுத்தி இருத்தல் ……………………………………………… தத்துவம் என கருதப்படும்.

ஆ) நியமத்துக்கும், உண்மைக்கும் இடையில் தோன்றும் வேறுபாடுகளை உடனுக்குடன் சீராக்குதல் சிறந்த ……………..………………………… தன்மை என கருதமுடியும்.

36) அ) அவசர தேவைகளை ஈடுசெய்வதற்காக நிறுவன களஞ்சியங்களில் பேணப்படும் இருப்பு மட்டம் ……………………………………….. என்பதாகும்.

ஆ) சரக்கிருப்புக்களை பூச்சிய மட்டத்தில் பேணுவதன் மூலம் கிரயங்களை இழிவளவாக்கும் கட்டுப்படுத்தல் ………………………………….. என்பதாகும்.

37) அ) வணிக வங்கிகளுக்கிடையே குறுங்கால நீதி மிகைகளுக்கும், குறுங்கால நிதி பற்றாக்குறைகளுக்கும் இடையிலான சந்தை ……………………… என அழைக்கப்படும்.

ஆ) பங்கு சந்தையில் பங்குக்கொடுக்கல் வாங்கல்களை தீர்வு செய்யும் மத்திய நிலையமாக கருமமாற்றுவது …………………………………… என்பதாகும்.

38) இலங்கை பங்குச்சந்தையில் பங்குகளையும், தொகுதிக் கடன்களையும் பட்டியலிடுவதற்கு பயன்படுத்தப்படும் முறைகள் …………………………..., …………………………… ஆகும்.

agaram.lk

39) அ) தற்போது பெரும்பாலான பால்மா வகைகள் மிகச்சிறிய பைகளில் பொதிகட்டி வருதலானது சந்தைப்படுத்தல் கலவை மாறியில் ………………..……………………..………. என்பதனுடன் அடக்க முடியும்.

ஆ) தனியார் வைத்தியசாலையொன்று தனது வளாகத்தினுள் WI – FI (அருகலை) வசதியினை புகுத்தியுள்ளமை சந்தைப்படுத்தல் கலவைமாறியில் ……………………………………… மாறியென கருத முடியும்.

40) அ) மனிதவள வெற்றிடங்களை நிறுவன அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தி பொருத்தமானவர்களை விண்ணப்பிக்கத் தூண்டுதல் ……………………………………… ஆட்சேர்த்தல் என்பதாகும்.

ஆ) குறித்தவொரு காலப்பகுதிக்கான ஊழியர் உள்ளீட்டுக்கும் வெளியீட்டுக்கும் இடையிலான தொடர்பு ……………………………………………… என அழைக்கப்படும்.

❖ **41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடைகளைத்தரப்பட்ட வெற்றிடங்களில் எழுதுக.**

41) வணிகங்களில் தோன்றக்கூடிய நான்கு இடர்களினைக் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………..
2) ……………………………………………………………………………………………..
3) ……………………………………………………………………………………………..
4) ……………………………………………………………………………………………..

42) அரசின் வரி அல்லாத வருமானங்களின் வகைகளாக

1) ……………………………………………………………………………………………..
2) ……………………………………………………………………………………………..
3) ……………………………………………………………………………………………..
4) ……………………………………………………………………… என்பவற்றைக் குறிப்பிடுக.

43) இலங்கையில் தொழிற்படும் பல்வேறுபட்ட கம்பனி அமைப்புக்களை ஒப்பிடுவதற்கு பயன்படும் நியதிகள் யாவை?

1) ……………………………………………………………………………………………..
2) ……………………………………………………………………………………………..
3) ……………………………………………………………………………………………..
4) ……………………………………………………………………………………………..

44) ஹென்றி மின்றஸ்பேர்க் என்பவரின் தீர்மான வகிபாகம் என்பதன் கீழ் ஆற்றப்படும் கருமங்கள் யாவை?

1) ……………………………………………………………………………………………..
2) ……………………………………………………………………………………………..
3) ……………………………………………………………………………………………..
4) ……………………………………………………………………………………………..

agaram.lk

45) பின்வரும் சுருக்கப்பதங்களினால் கருதப்படுவனவற்றை அருகே குறிப்பிடுக.

1) C A M ……………………………………………………………………………………

2) C N C ……………………………………………………………………………………

3) C I M ……………………………………………………………………………………

4) C A D ……………………………………………………………………………………

46) வணிகங்கள் பொருட் கொள்வனவினைப் போல் சேவைகளையும் கொள்வனவு செய்வதுண்டு எவையேனும் நான்கு சேவைக் கொள்வனவு வகைகளைக் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

3) ……………………………………………………………………………………………

4) ……………………………………………………………………………………………

47) உற்பத்திப் பொருடுகளின் விலையிடல் வணிகமொன்று கருத்தில் கொள்ளும் நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

3) ……………………………………………………………………………………………

4) ……………………………………………………………………………………………

48) பொதுவாக நேர் நிதி மூலகங்களில் காணத்தக்க அனுகூலங்கள் யாவை?

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

3) ……………………………………………………………………………………………

4) ……………………………………………………………………………………………

49) பங்கு முதலீட்டினால் முதலீட்டாளர் ஒருவருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் யாவை?

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

3) ……………………………………………………………………………………………

4) ……………………………………………………………………………………………

50) நிறுவனங்களில் மனிதவளங்களை தெரிவு செய்தல் வரைக்குமான கருமங்களை வரிசைக்கிரமமாக குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

3) ……………………………………………………………………………………………

4) ……………………………………………………………………………………………

agaram.lk

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
# Term Examination, March - 2018

| தரம் :- 13 (2018) | வணிகக்கல்வி - II | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**

- **ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி I

*01.*

1) "வணிக நிறுவன நோக்கங்களில் சந்தையில் முன்னிலை பெறுதல் என்பதும் ஒன்றாகும்."

அ) வணிக நிறுவனம் ஒன்றின் வேறு எவையேனும் நான்கு நோக்கங்களைக் குறிப்பிடுக.

ஆ) சந்தையில் முன்னிலை பெறுவதற்கு வணிகங்கள் எத்தகைய உபாயங்களை பின்பற்றுகின்றன என்பதற்கு நான்கு உபாய மாறிகளை குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

2) "சேவை வழங்கும் வணிகமொன்றில் சேவைகளுக்கு அடிப்படையாக இருப்பது பொருட்களே ஆகும்."

அ) பொருட்களுக்கும், சேவைகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) எவ்வாறு சேவை வணிகங்களுக்கு பொருட்கள் அடிப்படையாக இருக்க முடியும் என உதாரணம் ஒன்றின் மூலம் விளக்குக.

(04 புள்ளிகள்)

3) "பிரதானமான பொருளாதாரக் கருமங்களுக்கு வணிகங்களின் பங்கு அளப்பரியதாகும்.

அ) மேற்படி கூற்றுடன் உடன்படுகின்றீரா? அவ்வாறாயின் விளக்குக.

ஆ) பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகங்களின் பங்களிப்பினை காட்டுவதற்கு, எவையேனும் நான்கு உதாரணங்களைத் தருக.

(04 புள்ளிகள்)

4) "வெல்டன் ரெக்ஸ்ரைல்" என்பது மிகப்பிரபல்யமான புடவை வணிகம் ஆகும். பிரதான வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள இவ்வணிகத்தினை மொறின்ஸ்ரன் உரிமையாளராக இருந்து ஊழியர் இருவருடன் நடாத்தி வருகின்றார்."

இவ்வணிகத்தின் உற்பத்திக்காரணிகள் நான்கினைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு உதாரணம் தருக.

(04 புள்ளிகள்)

5) மேற்படி புடவை வணிகத்தின் அதிகரித்த போட்டித் தன்மையானது அதே வணிகத்தில் ஈடுபடும் வணிக நிறுவனம் ஒன்றினது விநியோகம் மற்றும் மேம்படுத்தல் தீர்மானங்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் இரண்டு முறைகள் வீதம் குறிப்பிட்டு விளக்குக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் - 5X4=20 புள்ளிகள்)

agaram.lk

02.

1) “எந்தவொரு பொருளாதார முறையிலும் அரசின் தலையீடு குறித்தவொரு அளவுக்கேனும் இருப்பதனைக் காண முடிகின்றது. ”

அ) அரசு வணிகநடவடிக்கைகளில் தலையிடாதிருப்பதனால் தோன்றக்கூடிய பாதகமான விளைவுகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) அரசு வணிகநடவடிக்கைகளில் பல்வேறு வழிகளில் தலையீடு செய்கின்றது. அத்தகைய நான்கு வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

2) பின்வருவன வணிகமொன்றில் அக்கறை காட்டும் பல்வேறு தரப்பினரின் எதிர்பார்க்கைகள் ஆகும்.

அ) பிணைப்பத்திரங்களின் மூலம் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்
ஆ) வணிக விருத்தி தொடர்பில் அறிவதற்கு
இ) வணிகத்தின் பொறுப்புக்கள் உரியவாறு நிறைவேற்றப்படுகின்றதா
ஈ) பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் அளவிடுவதற்கு
உ) சூழல் பாதுகாப்புத் தொடர்பில் அறிவதற்கு
ஊ) ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை பெறுவதற்கு
எ) சந்தைப் பங்கினை அறிநது கொள்வதற்கு
ஏ) தொடர்ச்சியாக கட்டளைகளைப் பெறுவதற்கு

மேற்குறிப்பிட்ட எதிர்பார்க்கைகளில் அக்கறை காட்டும் தரப்பினரை தனித்தனியே குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

3) “நுகர்வோர் பகுத்தறிவுள்ளவராக இருப்பதனால் செலுத்தப்படும் பணத்திற்கு ஏற்ற பெறுமானத்துடன் கூடியதும் தரத்துடன் கூடியதுமான பொருள்களைத் தெரிவு செய்வதற்கு ஊக்குவிக்கப்படுவர்.”

agaram.lk

அ) மேற்படி கூற்றுடன் தொடர்புபடும் இரு நுகர்வோர் உரிமைகளைக் குறிப்பிடுக.

ஆ) இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பிற்காக தொழிற்படுகின்ற அரச நிறுவனங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

4) “க.பொ.த உயர்தரத்தின் பின் நண்பர்கள் சிலர் பங்குடமை வணிகத்தை ஆரம்பிப்பதிலும் பார்க்க கூட்டிணைக்கப்பட்ட கம்பனியினை ஆரம்பிப்பது சிறந்ததென தீர்மானம் எடுக்கின்றனர்”

அ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் சிறப்புப் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனியில் காணப்படும் வரையறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

5) “அங்கீகார ஒப்பந்த நிலைமைகளே அங்கீகார வணிகத்தின் வெற்றிக்கும், வாழ்தன்மைக்கும் பெரும் துணைபுரிவதுண்டு”

அ) அங்கீகார ஒப்பந்தம் ஒன்றின் உள்ளடக்கங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) அங்கீகார வணிகத்தில் நுழையும் போது, அங்கீகாரம் பெறுபவர் அங்கீகாரம் வழங்குபவர் தொடர்பில் கருத்தில் கொள்ளும் காரணிகள் யாவை?

(04 புள்ளிகள்)

(மொத்தம் - 5X4=20 புள்ளிகள்)

03.

1) “சூழலில் காணப்படும் வாய்ப்புக்களை ஆக்க ரீதியாக அறிந்து இடரை ஏற்றுபுத்தாக்கம் புரிபவர் முயற்சியாளர் ஆவர்”.

அ) முயற்சியாளர் ஒருவர் தனது முயற்சியாண்மைத்திறன்களை விருத்திசெய்யக்கூடிய எவையேனும் நான்கு முறைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

ஆ) முயற்சியாளர், வணிகர் ஆகிய இருவருக்குமிடையிலான நான்கு வேறுபாடுகளைத்தருக.
(உமது விடைக்கு பின்வருவது போன்ற அட்டவணை ஒன்றினை பயன்படுத்துக)

| முயற்சியாளர் | வணிகர் |
|---|---|
| | |
| | |

(04 புள்ளிகள்)

2) அ) சிறிய வணிகம் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியாவசியமான காரணியாகும். இக்கருத்தை நான்கு உதாரணங்களைக் கொண்டு விளக்குக.

ஆ) சிறு நடுத்தர அளவு வணிகங்களை ஊக்குவிப்பதற்கு அரசு கடைப்பிடிக்கும் நிதிசார், நிதிசாராத ஊக்குவிப்புக்களுக்கு தலா இரண்டு உதாரணங்களைத் தருக.

(04 புள்ளிகள்)

3) “வணிகர்களுக்கு நடைமுறைக்கணக்கு மிக இன்றியமையாத ஒன்றாகும்”

அ) நடைமுறைக் கணக்கினைப் பேணுவதனால் வணிகர்களுக்கு கிடைக்கும் நான்கு நன்மைகளை குறிப்பிடுக.

ஆ) நடைமுறைக் கணக்கொன்றினை ஆரம்பித்திருக்கும் புதிய நபர் ஒருவருக்கு காசோலை ஒன்றினை எழுதும் போது கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்களை சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

4) சபீன், இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளையில் சேமிப்புக் கணக்கொன்றைக் கொண்டுள்ளார். வங்கியினால் அக்கணக்கிற்கென விசா இலத்திரனியல் அட்டை வழங்கப்பட்டுள்ளது. சபீன் அவ்வட்டையைப் பயன்படுத்தி கார்கிள்ஸ் பூட்சிற்றியில் பொருட்களைக் கொள்வனவு செய்கின்றார்.

அ) இலத்திரனியல் பணத்துடன் தொடர்புடைய தரப்பினர்களைக் குறிப்பிட்டு, மேற்படி நிகழ்வில் அத்தரப்பினரை அருகே குறிப்பிடுக.

ஆ) இலத்திரனியல் பணக்கொடுக்கல் வாங்கல்களின் இரு அனுகூலங்களையும், இரு பிரதி கூலங்களையும் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

5) “தனிநபர்களுக்கு ஏனைய காப்புறுதிகளைக் காட்டிலும் ஆயுள் காப்புறுதி மிக அனுகூலமானதாகும்”

அ) ஆயுள் காப்புறுதிக்கும், ஏனைய காப்புறுதிகளுக்குமிடையிலான வேறுபாடுகளினைக் குறிப்பிடுக.

(உமது விடைக்கு பின்வரும் அட்டவணையினை உபயோகிக்குக)

| ஆயுட் காப்புறுதி | ஏனைய காப்புறுதி |
|---|---|
| | |
| | |

ஆ) காப்புறுதியினால் பொருளாதாரத்திற்கு கிடைக்கும் நான்கு நன்மைகளைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் - 5X4=20 புள்ளிகள்)



agaram.lk

04.

1) “போக்குவரத்து வியாபாரத்தின் பரம்பலுக்கும், தனிநபர்கள் பரவலாக்கப்படுவதற்கும் காரணமாக அமைகின்றது.”

அ) போக்குவரத்து வியாபாரத்தின் பரம்பலுக்கு எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதற்குரிய நான்கு காரணங்களை முன்வைக்குக.

ஆ) போக்குவரத்து துறையின் போக்கு வளர்ச்சியடைந்த வண்ணம் காணப்படுகின்றது. போக்குவரத்தின் வளர்ச்சியடைந்து செல்லும் புதிய போக்குகளுக்கு நான்கு உதாரணங்களை குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

2) “பாடசாலைகளில் கூட்டங்களை நடாத்தும் போது அவை சரியாக திட்டமிடப்படுதல் வேண்டும். அதன் மூலமே கூட்டத்தின் நோக்கத்தினை அடைந்து கொள்ள முடியும்”

அ) கூட்டங்கள் பயனுறுதி வாய்ந்த தொடர்பாடலாக கருதப்படுவதற்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக.

ஆ) கூட்டங்கள் பயனுறுதி வாய்ந்த தொடர்பாடல் முறையாக கருதப்பட்டாலும் சில கூட்டங்கள் எதிர்பார்த்த நோக்கத்தினை அடைய முடியாமலுள்ளமைக்கான காரணங்கள் எவை என விளக்குக?

(04 புள்ளிகள்)

3) அ) மொத்த வியாபாரிக்கும் நுகர்வோருக்குமிடையே பொதுவாக நேரடித்தொடர்பு இல்லாவிடினும் கூட, மொத்தவியாபாரியினால் நுகர்வோருக்கு சில பணிகள் ஆற்றப்படுவதுண்டு. அத்தகைய பணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) பின்வருவனவற்றுக்கு சிறு குறிப்பு எழுதுக.
1. கப்பல் குத்தகைப்பத்திரம்
2. கப்பல் தளப்பத்திரம்

(04 புள்ளிகள்)

4) அ) சிறப்புச்சந்தைகளில் (Super market) பொருட்களை கொள்வனவு செய்வதனால் நுகர்வோருக்கு கிடைக்கும் நன்மைகள் யாவை?

ஆ) இன்று அநேகமான வணிக நிறுவனங்களில் தானியங்கி கண்காணிப்பு கமராக்கள் (CCTV) பொருத்தப்படுகின்றன. இதனால் வணிகர்களுக்கு கிடைக்கும் நன்மைகள் யாவை?

(04 புள்ளிகள்)

5) “இருநாடுகள் அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் குறிப்பிட்ட காலப்பகுதியொன்றினுள் வியாபார பொருட்களை பரிமாற்றிக் கொள்வதற்காக ஏற்படுத்தப்படும் உடன்பாடே வியாபார ஒப்பந்தம் ஆகும்.”

அ) எவையேனும் இரு சர்வதேச வியாபார ஒப்பந்தங்களைக் குறிப்பிடுக.

ஆ) சர்வதே ஒப்பந்தங்களினால் வெளிநாட்டு வியாபாரத்தில் ஏற்படும் நேரான தாக்கங்கள் யாவை?

(04 புள்ளிகள்)

(மொத்தம் - 5X4=20 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி II

*05.*

*1)* "திட்டமிடல் இன்றி கட்டுப்படுத்தல் இல்லை. கட்டுப்படுத்தல் இன்றி திட்டமிடல் இல்லை" பொதுவாக நிறுவன முகாமையாளர்கள் இதனை அடிக்கடி நினைவுபடுத்திக்கொள்வர்.

அ) திட்டமிடலும், கட்டுப்படுத்தலும் எவ்வாறு ஒன்றுடனொன்று தொடர்புடையதென விளக்குக.

ஆ) கட்டுப்படுத்தல் செயன்முறைக்கென நிறுவனங்கள் பெருமளவு காலத்தையும், பணத்தினையும் செலவு செய்கின்றன. இருந்தும் கட்டுப்படுத்தல் செயன்முறையில் அனுகூலங்களே அதிகமானவை ஆகும். அத்தகைய அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

*2)* கூடிய வெற்றிகரமான முகாமையாளர்ஆவதற்கு அறிவு, திறன், நேர்மனப்பாங்கு போன்ற தகமைகள் இருத்தல் வேண்டும்."

அ) மேற்படி தகமைகளில் எவையேனும் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

ஆ) சிறந்த முகாமைத்துவ செயன்முறைக்குத் தேவைப்படும் முகாமையாளரின் ஏனைய சிறப்பம்சங்கள் நான்கினைத்தருக.

(04 புள்ளிகள்)

*3)* "தீர்மானம் எடுத்தல் என்பது பல்வேறு மாற்றுவழிகளில் ஒன்றைத் தெரிவு செய்தல் என்பதாகும். எனினும் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு நிறுவனங்களில் முகாமையாளர்களையே சாரும்"

அ) சிறந்த மாற்றுவழியினைத் தெரிவு செய்வதில் கையாளத்தக்க நியதிகள் யாவை?

ஆ) தீர்மானம் ஒன்று உயர்மட்ட முகாமையினால் மட்டுமே எடுக்கப்பட முடியும் என்பதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் யாவை?

(04 புள்ளிகள்)

agaram.lk

*4)* அ) கட்டுப்படுத்தல் செயன்முறையின் படிமுறைகளை வரிசைக்கிரமமாக குறிப்பிடுக.

ஆ) ஏன் ஒரு வியாபாரம் தனது சாதனைகளை கண்காணித்து மீளாய்வு செய்கின்றது, என்பதற்கு நான்கு காரணங்களைத் தருக.

(04 புள்ளிகள்)

*5)* அ) முந்திய மீளூட்டல் கட்டுப்பாட்டுக்கட்டத்தில் எடுக்கப்படக்கூடிய இரு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

ஆ) பிந்திய மீளூட்டல் கட்டுப்பாட்டுக்கட்டத்தில் எடுக்கப்படக்கூடிய இரு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் - 5X4=20 புள்ளிகள்)

06.

1) ''உற்பத்தி முகாமைத்துவத்தினைக் காட்டிலும், செயற்பாட்டு முகாமைத்துவம் மிகப்பரந்த தொன்றாகும்.''

அ) செயற்பாட்டு முகாமைத்துவத்தின் எவையேனும் நான்கு பிரதான கருமங்களினை குறிப்பிட்டு, அக்கருமத்தினுள் ஆற்றப்படும் செயற்பாடுகளுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.

ஆ) ஆரூரன் என்பவர் யாழ்ப்பாண நகரில் பாடசாலை மாணவர்களுக்கான கழுத்துப்பட்டி மற்றும் காலுறை என்பனவற்றினை உற்பத்தி செய்யும் வணிகமொன்றினை ''கொலிஜ் கோணர்'' என்ற பெயரில் ஆரம்பித்திருந்தார்.
இவ் உற்பத்தி முறையின் அனுகூலங்களினை குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

2) ''தரக்கட்டுப்பாட்டின் முழு மொத்த நோக்கம், தரத்தினைப் பேணுவதன் ஊடே, இலாபகர நிலையை அதிகரிக்கச் செய்தல் என்பதாகும்.''

அ) தரக்கட்டுப்பாட்டின் முழுமொத்த நோக்கம் என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) தரக்கட்டுப்பாட்டினைப் பேணுவதனால் வணிகமொன்றுக்குக் கிடைக்கும் நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

3) பின்வருவன உற்பத்தித் தொழிற்சாலை சிலவற்றில் பயன்படுத்தும் கட்டுப்பாட்டு முறைகள் தொடர்பான விபரணங்கள் ஆகும். ஒவ்வொரு விபரணமும் எத்தகைய கட்டுப்பாட்டு முறை என தனித்தனியே குறிப்பிடுக.

அ) தேசிய ரீதியிலான நியமங்களை மிக உன்னதமாக கடைப்பிடித்து உற்பத்தித்தரங்களினை உயர்த்துதல்.

ஆ) கடந்தகால சாதனை அடைவு தொடர்பான தரவுகளினை சகல தரப்பினருக்கும் காட்சிப்படுத்துதல்.

இ) குறிப்பிட்ட பணியில் ஈடுபடும் ஊழியர் இணைந்து கலந்துரையாடல் மூலம் தரங்களை உயர்த்தும் வழிகளை ஆராய்தல்.

ஈ) உற்பத்திச் செயன்முறையின் சகலபடிகளும் ஒழுங்கான பரிசீலனையுடன் தரங்களை உயர்த்தும் நடைமுறைகள்.

(04 புள்ளிகள்)

4) வணிகமொன்றின் ஒருவகை உற்பத்திப்பொருளுக்கான வருடாந்த தகவல்கள் வருமாறு

நிலையான கிரயம் 40, 000 ரூபா

அலகுமாறும் கிரயம் 20 ரூபா

இலாப விகிதம் விற்பனையில் 20%

எதிர்பார்க்கும் விற்பனை அலகுகள் 10,000

அ) மேற்படி உற்பத்திக்கான அலகுவிற்பனை விலையினைத்துணிக.

ஆ) மேற்படி வணிகத்தின் இலாபநட்டமற்ற புள்ளிக்கான உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை யாது?

(04 புள்ளிகள்)

5) “தனிநபர்களினதும், குழுக்களினதும் தேவைகள், விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஏனைய தரப்பினர்கள் மூலமாக பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தல், வழங்கல், சுதந்திரமாக பரிமாற்றம் செய்தல், போன்ற சமூக மயமான முகாமைத்துவ செயற்பாடுகள்” சந்தைப்படுத்தல் ஆகும்.

அ) தனிநபர்களுக்கு சந்தைப்படுத்தலின் முக்கியத்துவங்களை குறிப்பிடுக.

ஆ) சந்தைப்படுத்தலின் அடிப்படை எண்ணக்கருக்கள் ஒன்றுடனொன்று தொடர்புடைய சங்கிலி தொடர்போல் அமைந்தனவாகும். அவற்றினை வரிசைக்கிரமமாக குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் - 5X4=20 புள்ளிகள்)

07.

1) “சந்தைப்படுத்தலில் வெற்றியீட்டாத சில வணிகர் சந்தைகளை துண்டாடுவதில் கரிசனை செலுத்தாது விடுவதும் ஒரு காரணமாகும்”

அ) சந்தையொன்று துண்டாடப்படுவதற்கு பயன்படுத்தப்படும் நான்கு மூலங்களை உதாரணம் ஒன்றின் மூலம் காட்டுக.

ஆ) சந்தைகள் துண்டாடப்படுவதனால் வணிகர்களுக்கு கிடைக்கும் நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

2) “வணிகர்கள் தமது தேவைகளுக்கேற்ப சந்தைப்படுத்தல் கலவை மாறிகளை பயன்படுத்திக் கொள்வதனூடே இலக்குச்சந்தைகளை வெற்றிகொள்வதுண்டு.”

அ) சந்தைப்படுத்தல் கலவை மாறிகளின் ஆக்கக்கூறுகளை ஒவ்வொரு கலவைக்கும் தனித்தனியே குறிப்பிடுக.

ஆ) “இலக்குச்சந்தை” என்பதனை விளக்குக.

(04 புள்ளிகள்)

agaram.lk

3) “வினைதிறனை சந்தைப்படுத்தல் ஆராய்ச்சிகளே நீண்டகாலம் வணிகர்களை சந்தையில் நிலைத்து நிற்கச் செய்வதுண்டு”

அ) சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி என்பதனை சுருக்கமாக விளக்குக.

ஆ) சந்தைப்படுத்தல் ஆராய்ச்சிக்காக சேகரிக்கப்படும் தரவுகளின் இரு வகைகளினையும் குறிப்பிட்டு அவற்றிற்கான உதாரணங்களையும் தருக.

(04 புள்ளிகள்)

4) அ) பொருளொன்றினை பாதுகாப்பது என்பதே பொதியின் அடிப்படை பணியெனினும், அது இன்று மேலும் பல்வேறு பணிகளினை ஆற்றி வருவதுண்டு. அத்தகைய பணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) பொதியிடலை வடிவமைக்கும் போது உற்பத்தியாளர்கள் கருத்தில் கொள்ளும் நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

5) அ) “உற்பத்திப்பொருள் வாழ்க்கை வட்டம்” என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) உற்பத்திப் பொருள் வாழ்க்கை வட்டத்தின் கட்டங்களைக் குறிப்பிட்டு அவற்றில் முதிர்ச்சிக் கட்டத்தில் எடுக்கப்படக்கூடிய நான்கு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் - 5X4=20 புள்ளிகள்)

08.

1) "எந்தவொரு வணிகத்தினதும் மிக முக்கியமானதும் நிறுவனத்தின் எல்லாப்பகுதிகளையும் இணைப்பதுமான ஒன்றே நிதி என்பதாகும்."

அ) இன்றைய நிதி முகாமைத்துவத்தின் அடிப்படை இலக்குகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) மேற்படி இலக்குகளினை அடைய முற்படும் போது நிதி முகாமையாளர்களினால் எடுக்கப்படும் தீர்மானங்களின் இருவகைகளினையும் குறிப்பிட்டு தலா ஒரு உதாரணமும் தருக.

(04 புள்ளிகள்)

2) உரிமை நிதியளிப்பு கடன்நிதியளிப்பு என்பனவற்றினை தெரிவு செய்யும் போது செல்வாக்குச் செலுத்தும் நான்கு காரணிகளை குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றையும் தனித்தனியே விளக்குக.

(04 புள்ளிகள்)

3) அ) கடன் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக நிதி நிறுவனம் ஒன்றைத் தெரிவு செய்கையில் கருத்தில் கொள்ள வேண்டிய நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

ஆ) தொழிற்படு மூலதன இறுக்கக்கட்டுப்பாடுகளின் போது நிறுவனம் எடுக்கும் நடவடிக்கைகளினால் கிடைக்கும் இரு அனுகூலங்களையும் இரு பிரதி கூலங்களையும் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

4) அ) ஏனைய வளங்களுடன் ஒப்பிடுமிடத்து மனிதவளத்துக்கு மட்டுமே உரிய நான்கு சிறப்பியல்புகளை குறிப்பிடுக.

ஆ) தொழில் விபரணம் செய்தல், தொழில் சிறப்பியல்பாக்கல் என்பவற்றை தனித்தனியே விளக்குக.

(04 புள்ளிகள்)

5) அ) சிறந்த மனிதவள திட்டமிடலினால் வணிக நிறுவனங்களுக்கு கிடைக்கும் நான்கு நன்மைகளை பட்டியலிடுக.

ஆ) மனிதவளத்துக்கான எதிர்காலத் தேவைகளை எதிர்வு கூறும் போது கருத்தில் கொள்ளும் காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் - 5X4=20 புள்ளிகள்)

agaram.lk